# அகீததுல் முஸ்லிமீன்

## (முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாடுகள்)

### கேள்வி - பதில்





# عَقِيْدَةُ الْمُسْلِمِيْنَ

# அகீததுல் முஸ்லிமீன்

## (முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாடுகள்)

## கேள்வி - பதில்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அகீததுல் முஸ்லிமீன் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு<br>(முதலாம் பதிப்பு - 2016) |
| பக்கங்களின் எண்ணிக்கை | : | 56 |
| பிரதிகளின் எண்ணிக்கை | : | 5000 |
| வெளியிடுவோர் | : | இமாம் அல் அஷ்அரீ அறபுக் கல்லூரி |
| முகவரி | : | பிறெட்ரிகா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06. |
| வெளியிடப்பட்ட திகதி | : | செப்டம்பர் 2020 |
| தொடர்புகளுக்கு | : | 011 7 446 336- 077 077 9406- 077232 8686 |

بسم الله الرحمن الرحيم

الحمد لله الموجود أزلا وأبدا بلا مكان. المنزه عن الجسم والصورة والأركان وعن جميع صفات المخلوقين. والصلاة والسلام على محمد رسول الله وخاتم الأنبياء والمرسلين وعلى آله وأصحابه الطيبين الطاهرين.

அகீததுல் முஸ்லிமீன் என்ற இந்த நூலை மொழிபெயர்ப்பு செய்து வெளியிட அருள் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இந்த நூலானது வெற்றி பெறும் கொள்கையுடையோராகிய அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் நம்பிக்கைகளை தெளிவுபடுத்தும் ஒரு அற்புத நூலாகத் திகழ்வதுடன், கொள்கை ரீதியாக முஸ்லிம்களுக்கெதிராக முன்வைக்கப்படும் பல குற்றச்சாட்டுகளுக்குரிய அழகிய தீர்வை அல்குர்ஆன், ஸுன்னஹ் அடிப்படையில் தரும் அருமையான நூலாகவும் தனித்துவம் பெற்றுள்ளது.

இந்த நூலானது எகிப்தின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு சரிகாணப்பட்ட பின் அவர்களின் உத்தியோகபூர்வ அனுமதியுடன் பல இஸ்லாமிய நாடுகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, வெளியிடப்பட்டு வருகிறது. இலங்கை சார்பாக தமிழ் மொழியில் இதனை மொழிபெயர்த்து வழங்குவதில் நாம் பெருமை அடைவதுடன் சகல முஸ்லிம் சகோதர சகோதரிகளும் இச்சிறு நூலின் முழுப் பலனையும் பெற பிரார்த்தனை செய்கிறோம். அல்லாஹ்வின் பொருத்தம் நாடி செய்யப்பட்ட இந்நல்லமலை அவன் பொருந்திக்கொள்வானாக! ஆமீன்.

வினா 1 : மார்க்க அறிவில் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டியவை எவை?

விடை : பருவமடைந்த, புத்தியுள்ள, இஸ்லாமிய அடிப்படை த.்.வாவாகிய "வணங்கிவழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை, முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதரும் ஆவார்கள்" என்ற பிரச்சாரத்தை எத்திய ஒவ்வொருவரும் மார்க்க அறிவில் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய பகுதிகள் என்பன

- 📖 இஸ்லாமியக் கொள்கை அறிவு,
- 📖 சுத்தம் பற்றிய அறிவு,
- 📖 தொழுகை, நோன்பு பற்றிய அறிவு,
- 📖 கொடுக்கல், வாங்கல் பற்றிய அறிவு,
- 📖 வசதி படைத்தோர் மீது ஸகாத், சக்தி உள்ளோர் மீது ஹஜ் என்பவை பற்றிய அறிவு,
- 📖 மேலும் அல்லாஹ்வினாலும், அவன் தூதரினாலும் கடமையாக்கப்பட்ட ஏனைய அனைத்து கடமைகள் பற்றிய அறிவு,
- 📖 உள்ளம், கை, கண், காது போன்ற பஞ்ச உறுப்புக்களினாலும், முழு உடலினாலும் ஏற்படக்கூடிய பாவங்கள் பற்றிய அறிவு ஆகியனவாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

قُلْ هَلْ يَسْتَوِى ٱلَّذِينَ يَعْلَمُونَ وَٱلَّذِينَ لَا يَعْلَمُونَ ۗ ﴿٩﴾

விளக்கம் : "***இஸ்லாமியக் கல்வியைப் பெற்றவர்களும், பெறாதவர்களும் ஒரே தரமுடையவர்கள் அல்ல***"

(அத்தியாயம் : அஸ்-zஸுமர் வசனம் : 9)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

طَلَبُ العِلْم فَرِيْضَةٌ عَلى كُلِّ مُسْلِمٍ

விளக்கம் : "மார்க்கத்தில் கட்டாயமாக்கப்பட்ட கல்வியைத் தேடிக் கற்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்."
(அறிவித்தவர் : இமாம் அல்-பைஹகீ ﵀ )

வினா 2: மனித வர்க்கமும், ஜின் வர்க்கமும் படைக்கப்பட்டதின் தாற்பரியம் என்ன?

விடை : அல்லாஹ் தன்னை வணங்குமாறு கட்டளையிடுவதற்காகவே மனித வர்க்கத்தையும் ஜின் வர்க்கத்தையும் படைத்தான்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَمَا خَلَقْتُ ٱلْجِنَّ وَٱلْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ۝٥٦

விளக்கம் : "*நான் ஜின் வர்க்கத்தையும் மனித வர்க்கத்தையும் என்னை வணங்குமாறு கட்டளை பிறப்பிப்பதற்காகவே படைத்துள்ளேன்.*"
(அத்தியாயம் : அஸ்-ஸzாரியாத் வசனம் : 56)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

حَقُّ اللهِ عَلَى العِبادِ أنْ يَعْبُدُوْهُ وَلايُشْرِكُوا بِهِ شَيْئًا

விளக்கம் : "அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமை அவனுக்கு எதனையுமே இணைவைக்காமல் அவனை மாத்திரமே

வணங்குவதாகும்.''
(அறிவித்தவர்கள்: இமாம் அல்-புஹாரீ, இமாம் முஸ்லிம்)

வினா 3 : வணக்கம் எப்போது ஏற்றுக்கொள்ளப்படும்?

விடை : அல்லாஹ்வை எப்படைப்புக்கும் ஒப்பாக்காமல், அவன் உள்ளான் என நம்பக்கூடியவர்களிடமிருந்து வணக்கம் நிறைவேறும். அல்லாஹ் கூறியுள்ளான் :

لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ ۖ ﴿١١﴾

விளக்கம் : ''*எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை.*''
(அத்தியாயம் : அஷ்-ஷூறா வசனம் : 11)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

لاَ فِكْرَةَ فِى الرَّبِّ

விளக்கம் : ''அல்லாஹ்வின் யதார்த்தத்தைப் பற்றி சிந்திக்கவே வேண்டாம்.''
(அறிவித்தவர்: இமாம் அபுல்-காஸிம் அல்-அன்ஸாரீ)

இமாம் அல்கஸ[z]ாலி ؓ அவர்கள் கூறியுள்ளார்கள்:

لاَ تَصِحُّ الْعِبَادَةُ إِلَّا بَعْدَ مَعْرِفَةِ الْمَعْبُودِ

''வணங்கப்பட வேண்டிய அல்லாஹ்வை முறைப்படி அறியாமல் மேற்கொள்ளப்படும் வணக்கம் நிறைவேறாது.''

வினா 04 : அல்லாஹ் தூதர்களை அனுப்பியது ஏன்?

விடை : மக்களுக்கு இம்மை மறுமையின்

நலவுகளைக் கற்றுக்கொடுப்பதற்காகவும் மேலும் அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காமல் அவனை வணங்குமாறு அழைப்பு விடுப்பதற்காகவுமே அல்லாஹ் தூதர்களை அனுப்பினான்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

فَبَعَثَ ٱللَّهُ ٱلنَّبِيِّـۧنَ مُبَشِّرِينَ وَمُنذِرِينَ ﴿٢١٣﴾

விளக்கம் : "*அல்லாஹ், நபிமார்களை சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் கூறுபவர்களாகவும், நரகத்தை பற்றி அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் அனுப்பினான்.*"
(அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 213)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :
أَفْضَلُ مَا قُلْتُ أَنَا وَالنَّبِيُّونَ مِنْ قَبْلِيْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ

விளக்கம் : நானும், எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறிய வார்த்தைகளில் மிகச்சிறந்தது "லா இலாஹ இல்லழ்ழாஹ்" அதாவது "உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை" என்பதாகும்.
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 05 : "தவ்ஹீத்" என்பதன் கருத்து என்ன?

விடை : இமாம் அல்-ஜுனைத் رضي الله عنه அவர்கள் சொன்னது போலவே,

التَّوْحِيْدُ إِفْرَادُ الْقَدِيْمِ مِنَ الْمُحْدَثِ

தவ்ஹீத் என்பது ஆரம்பம் இல்லாத அழ்ழாஹ்வை படைப்புக்களை விட்டும் தனித்துவப்படுத்துவதாகும்.
அல்லாஹ் கூறியுள்ளான் :

لَيۡسَ كَمِثۡلِهِۦ شَيۡءٞۖ ﴿١١﴾

விளக்கம் : "*எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை.*"
(அத்தியாயம் : அஷ்-ஷூறா வசனம் : 11)

அல்ஹதீஸ் :

سُئِلَ رَسُوْلُ اللهِ ﷺ : أيُّ الْعَمَلِ أَفْضَلُ فَقَالَ : إِيْمَانٌ بِاللهِ وَرَسُوْلِهِ

விளக்கம் : அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களிடம் மிகச் சிறந்த அமல் எது? எனக் கேட்கப்பட்ட போது "அல்லாஹ்வையும் அவனது தூதரையும் (சரியான முறைப்படி) ஈமான் கொள்வதாகும்" எனக்கூறினார்கள்.
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 06 : அல்லாஹ் உள்ளான் என்பதைப் பற்றி விபரிக்குக.

விடை : அல்லாஹ் உள்ளான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவன் எந்த விதமும், எந்த இடமும், எந்தத் திசையும் இன்றி உள்ளான். அவனுடைய படைப்பில் அவன் எதற்குமே ஒப்பாகக்கூடியவன் அல்ல. மேலும் எந்த படைப்பும் அவனுக்கு ஒப்பாகக் கூடியதாகவும் இல்லை.
அல்லாஹ் கூறியுள்ளான் :

أَفِي ٱللَّهِ شَكّٞ ﴿١٠﴾

விளக்கம் : "*அல்லாஹ் உள்ளான் என்ற விடயத்தில் எவ்வித சந்தேகமும் ஏற்பட முடியாது.*"
(அத்தியாயம் : இப்றாஹீம் வசனம் : 10)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

كَانَ اللهُ وَلَمْ يَكُنْ شَيْءٌ غَيْرُهُ

விளக்கம் : "அல்லாஹ் தன்னையன்றி எதுவுமே இல்லாத போதே ஆரம்பமில்லாத தன்மையில் உள்ளான்."
(அறிவித்தவர்கள் : இமாம் அல்-புஹாரீ மற்றும் அவர்கள் அல்லாதோர்)

வினா 07 :

وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ ۚ ﴿٤﴾

என்ற வசனத்தின் விளக்கம் யாது?

விடை : "*நீங்கள் எங்கிருந்த போதிலும் அல்லாஹ் உங்களை முற்றிலும் அறிந்தவனாக உள்ளான்*" என்பதாகும்.

இவ்விளக்கத்தையே இமாம் அஸ்-ஸௌரீ ؓ, இமாம் அஷ்-ஷாபீஈ ؓ, இமாம் அஹ்மத் ؓ, இமாம் மாலிக் ؓ ஆகியோரும் மற்றும் சில இமாம்களும் முன் வைத்துள்ளனர்.
இந்த வசனத்திற்கு "நீங்கள் எங்கிருந்த போதிலும் அல்லாஹ் உங்களுடன் யதார்த்தத்தில் இருக்கிறான்" எனக் கருத்துக் கூறுவது இஸ்லாமியக் கொள்கைக்கு முரணானதும், குப்ருடைய வார்த்தையுமாகும்.
அல்லாஹ் கூறியுள்ளான் :

وَأَنَّ ٱللَّهَ قَدْ أَحَاطَ بِكُلِّ شَىْءٍ عِلْمًۢا ﴿١٢﴾

விளக்கம் : "*நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவன்.*"
(அத்தியாயம் : அத்-தலாக் வசனம் : 12)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

اِرْبَعُوْا عَلَى أَنْفُسِكُمْ فَإِنَّكُمْ لا تَدْعُوْنَ أَصَمَّ وَلا غَائِبًا وَإِنَّمَا تَدْعُوْنَ سَمِيْعًا قَرِيْبًا

விளக்கம் : “நீங்கள் உங்களைக் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டாம். நிச்சயமாக நீங்கள் கேளாதவனையோ, அறியாதவனையோ பிரார்த்திக்க வில்லை. மாறாக நீங்கள், கேட்பவனாகவும் அனைத்தையும் அறிந்தவனுமாகிய அல்லாஹ்வையே பிரார்த்திக்கின்றீர்கள்.”
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

அதன் பொருள் அல்லாஹ்வுக்கு எதுவும் மறைந்ததாக இல்லை.

குறிப்பு : இந்த ஹதீஸுக்கு “அல்லாஹ் உங்களுடன் யதார்த்தத்தில் நெருக்கமாக உள்ளான்” எனக் கருத்துக் கொள்வது குப்ரை ஏற்படுத்தும்.

வினா 08 : பாவங்களில் மிகக் கொடியது எது?

விடை : பாவங்களில் மிகக் பெரியது குப்ராகும். மேலும் இணைவைத்தல் குப்ரை சார்ந்ததாகும்.

இணைவைத்தல் என்பது : அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவதாகும்.

லுக்மான் عليه السلام அவர்கள் கூறியதாக அல்லாஹ் கூறியுள்ளான்

يَٰبُنَيَّ لَا تُشۡرِكۡ بِٱللَّهِۖ إِنَّ ٱلشِّرۡكَ لَظُلۡمٌ عَظِيمٞ ١٣

விளக்கம் : "*என் அருமை மைந்தனே! நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்க வேண்டாம், நிச்சயமாக இணைவைத்தல் பெரும் அநியாயமாகும்.*"
(அத்தியாயம் : லுக்மான் வசனம் : 13)

அல் ஹதீஸ் :
سُئِلَ النَّبِيُّ صلى الله عليه وسلم أيُّ الذُّنُوبِ أَعْظَمُ ؟ قَالَ : أَنْ تَجْعَلَ للهِ نِدًّا وَهُوَ خَلَقَكَ

விளக்கம் : மிகப் பெரிய பாவம் எது? என நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களிடம் கேட்கப்பட்ட போது "அல்லாஹ் உங்களைப் படைத்திருக்கையில் நீங்கள் அவனுக்கு இணைவைப்பதாகும்" எனக் கூறினார்கள்.
(அறிவித்தவர்கள் : இமாம் புஹாரீ மற்றும் அவர் அல்லாதோர்)

வினா 09 : (இபாதத்) வணக்கம என்றால் என்ன?

விடை : வணக்கம் என்பது "பணிவினதும், உள்ளச்சத்தினதும் மிக உச்ச நிலையை வெளிப்படுத்துவதாகும்" என ஹதீஸ் கலையில் அல்-ஹாபிழ் என்ற தரத்தையடைந்த இமாம் அஸ்-ஸுபுகீ அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعْبُدُونِ ﴿٢٥﴾

விளக்கம் : "*உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் என்னைத்தவிர வேறு யாரும் இல்லை, எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள்.*"
(அத்தியாயம் : அல்-அன்பியாஉ வசனம் : 25)

வினா 10 : இபாதத் எனும் பொருளில் துஆ (الـــــدعاء) எனும் பதம் பிரயோகிக்கப்படுமா?

விடை : ஆம், துஆ எனும் பதம் இபாதத் எனும் பொருளில் பிரயோகிக்கப்படும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

قُلْ إِنَّمَآ أَدْعُواْ رَبِّي وَلَآ أُشْرِكُ بِهِۦٓ أَحَدًا ﴿٢٠﴾

விளக்கம் : "***அவனுக்கு எதையும் இணைவைக்காத நிலையில் எனது ரப்பை மாத்திரம் நான் வணங்குகிறேன்" என்பதாக நபியவர்களே! நீங்கள் கூறுங்கள்.***
(அத்தியாயம் : அல்-ஜின் வசனம் : 20)

குறிப்பு : இங்கு (أدعـــــــــو) 'அத்ஊ' எனப்படும் அரபு சொல் "நான் வணங்குகிறேன்" என்பதாகவே பொருள் தருகிறது.

மேலும் அல்லாஹ் கூறியுள்ளான் :

فَلَا تَدْعُواْ مَعَ ٱللَّهِ أَحَدًا ﴿١٨﴾

விளக்கம் : "***அல்லாஹ் மாத்திரமே வணங்கப்படத் தகுதியானவன் எனவே நீங்கள் அவனல்லாத எதையும் வணங்க வேண்டாம்.***"
(அத்தியாயம் : அல்-ஜின் வசனம் : 18)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

الدُّعَاءُ هُوَ الْعِبَادَةُ

விளக்கம் : "அல்லாஹ்வைப் பிரார்த்திப்பது நன்மை தரக்கூடிய விடயமாகும்."

(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

குறிப்பு : இங்கு “அல்-இபாதஹ்” என்பதன் கருத்து நன்மை தரக்கூடிய விடயம் என்பதாகும்.

வினா 11 : “துஆ” என்பது வணங்குதல் என்ற பொருள் தருவது போல் வேறு பொருள்களிலும் பிரயோகிக்கப்படுமா?

விடை : ஆம், அழைத்தல் எனும் பொருளிலும் பிரயோகிக்கப்படும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

لَّا تَجْعَلُوا۟ دُعَآءَ ٱلرَّسُولِ بَيْنَكُمْ كَدُعَآءِ بَعْضِكُم بَعْضًا ﴿٦٣﴾

விளக்கம் : “*நீங்கள் உங்களுக்கு மத்தியில் ஒருவரின் பெயரைக்கூறி அழைப்பது போல உங்களது நபியின் பெயரைக்கூறி அழைக்க வேண்டாம்.*”
(அத்தியாயம் : அந்-நூர் வசனம் : 63)

குறிப்பு : மேற்கூறப்பட்ட திருவசனத்தில் “துஆ” என்ற பதம் அழைத்தல் என்ற பொருளில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

வினா 12 : ஒரு நபியையோ அல்லது அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவரையோ அழைப்பது பற்றியும் வழமையில் வேண்டப்படாத ஒன்றை இவர்களிடத்தில் வேண்டப்படுவது பற்றியும் மார்க்கத் தீர்ப்பு என்ன?

விடை : இவை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். ஏனெனில் அவற்றை மாத்திரம் செய்வதினால் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்கியதாக கருதப்பட மாட்டாது. இவ்வாறே “யாரஸூலல்லாஹ்” என அழைப்பதும்

அல்லாஹ்வுக்கு இணைவைத்தலாக மாட்டாது.

உமர் ﷺ அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஓர் ஆண்டில் வரட்சி ஏற்பட்ட போது பிலால் இப்னு அல்-ஹாரிஸ் அல்-முஸனி ﷺ எனும் ஸஹாபி அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் அடக்கஸ்தலத்தை வந்தடைந்து,

يَارَسُوْلَ اللهِ اسْتَسْقِ لِأُمَّتِكَ فَإِنَّهُمْ قَدْ هَلَكُوْا

"அல்லாஹ்வின் தூதரே! உங்களின் சமுதாயத்துக்காக மழை வேண்டி துஆச்செய்யுங்கள், அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்" என வேண்டினார்.
இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.
(அறிவித்தவர்கள் : இமாம் அல்-பைஹகீ மற்றும் அவர் அல்லாதோர்)

குறிப்பு : அவர்களின் இச்செயலை உமர் ﷺ அவர்களோ அல்லது ஏனைய ஸஹாபாக்களோ மறுக்கவில்லை. மாறாக அவர்கள் இச்செயலைப் பாராட்டினார்கள்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَلَوْ أَنَّهُمْ إِذ ظَّلَمُوٓاْ أَنفُسَهُمْ جَآءُوكَ فَٱسْتَغْفَرُواْ ٱللَّهَ وَٱسْتَغْفَرَ لَهُمُ ٱلرَّسُولُ لَوَجَدُواْ ٱللَّهَ تَوَّابًا رَّحِيمًا ﴿٦٤﴾

விளக்கம் : "*நிச்சயமாக அவர்கள் தங்களுக்கே அநியாயம் இழைத்துவிட்டு, அவர்கள் உங்களிடம் வந்து அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத்தேடி, அல்லாஹ்வின் தூதரும் அவர்களுக்காக பாவமன்னிப்புத்தேடினால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் மன்னிப்பையும், அருளையும் பெற்றுக் கொள்வார்கள்.*"
(அத்தியாயம் : அந்-நிஸாஉ வசனம் : 64)

முஹம்மத் ﷺ அவர்களின் மரணத்திற்குப் பின் ஒரு சமயம் இப்னு உமர் ﵄ அவர்களின் கால் பக்கவாதம் போன்ற ஓர் நோயால் பாதிக்கப்பட்டு செயலிழந்த போது அவர்கள் "யா முஹம்மத்!" (முஹம்மதே! ﷺ) என உதவி தேடி அழைத்தார்கள்.
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ நூல் : அல்-அதபுல் முப்ரத்)

வினா 13 : உதவி தேடி அழைக்கும் "இஸ்திஹா[GH]ஸஹ்", "இஸ்திஆனஹ்" ஆகியவைகளின் கருத்தை ஆதாரத்துடன் விளக்குக.

விடை : "இஸ்திஹா[GH]ஸஹ்" என்பது குறிப்பாக கஷ்ட நிலைமை ஏற்படும் போது உதவி தேடுவதைக் குறிக்கின்றது.
"இஸ்திஆனாஹ்" என்பது பொதுவாக எல்லா விதமான உதவி தேடல்களையும் உள்ளடக்கும்.
அல்லாஹ் கூறியுள்ளான் :

وَٱسْتَعِينُوا۟ بِٱلصَّبْرِ وَٱلصَّلَوٰةِ ﴿٤٥﴾

விளக்கம் : "*நீங்கள் பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள்*"
(அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 45)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

تَدْنُو الشَّمْسُ مِنْ رُءُوسِ النَّاسِ يَوْمَ الْقِيَامَةِ فَبَيْنَمَا هُمْ كَذٰلِكَ إِذْ اسْتَغَاثُوْا بِآدَمَ

விளக்கம் : "மறுமையில் மக்களின் தலைகளுக்கு அருகில் சூரியன் நெருங்கி இருக்கும் போது அவர்கள் ஆதம் ؑ அவர்களிடம் உதவி தேடுவார்கள்."

(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

குறிப்பு : இந்த ஹதீஸ் அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடுவது ஆகுமானது என்பதற்கான தெளிவான ஆதாரமாக உள்ளது. என்றாலும் அவ்வாறு உதவி தேடுபவர், நிச்சயமாக அல்லாஹ்தான் யதார்த்தத்தில் நல்லவைகளையும், தீயவைகளையும் உண்டாக்குகிறான் என்ற உறுதியான நம்பிக்கையுடையவராக இருத்தல் வேண்டும்.

வினா 14 : நபிமார்களைப் பொருட்டாக வைத்து தவஸ்ஸுல் செய்வது பற்றி விளக்குக.

விடை : முஜ்தஹித்களின் ஆய்வின் ஏகோபித்த முடிவின் படி நபிமார்களைப் பொருட்டாக வைத்து அல்லாஹ்விடம் 'தவஸ்ஸுல்' முறைப்படி உதவி வேண்டுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

“தவஸ்ஸுல்” என்பது : ஓர் அடியான், நிச்சயமாக அல்லாஹ்தான் யதார்த்தத்தில் நல்லவைகளையும் தீயவைகளையும் உண்டாக்குகிறான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் ஏதொ ஒரு பிரயோஜனத்தைப் பெற்றுக் கொள்ள அல்லது ஓர் ஆபத்தை தடுத்துக்கொள்ள ஒரு நபியையோ அல்லது அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவரையோ சங்கைப் படுத்தும் நோக்கில் அவர்களைப் பொருட்டாக வைத்து அல்லாஹ்விடம் வேண்டுவதாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَٱبْتَغُوٓاْ إِلَيْهِ ٱلْوَسِيلَةَ ﴿٣٥﴾

விளக்கம் : "*அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்றுத்தரும் வழிமுறைகளைத் தேடுங்கள்.*"
(அத்தியாயம் : அல்-மாஇதஹ் வசனம் : 35)

அல்-ஹதீஸ் :
அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள், பார்வையற்ற ஒருவருக்கு தன்னைப் பொருட்டாக வைத்து அல்லாஹ்விடம் உதவி தேடும் முறையான வஸீலஹ்வை கற்றுக் கொடுத்தார்கள். பார்வையற்ற அந்த மனிதர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் முன்னிலையிலின்றி அவர் அதைச் செய்த போது, அல்லாஹ் அவருடைய பார்வையை மீட்டிக்கொடுத்தான்.
அறிவித்தவர் : இமாம் அத்-தபரானீ. அவர்கள் இதை அஸ்-ஸஹீஹ் எனவும் தீர்ப்புக் கூறியுள்ளார்கள்

வினா 15 : அல்லாஹ்வின் நல்லடியார்களைப் பொருட்டாக வைத்து தவஸ்ஸுல் செய்வது பற்றி விளக்குக.

விடை : அல்லாஹ்வின் நல்லடியார்களைப் பொருட்டாக வைத்து அல்லாஹ்விடம் உதவி தேடும் முறையான தவஸ்ஸுல் (வஸீலஹ்) என்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். இந் நற்செயலை ஹிஜ்ரி ஆரம்ப மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த சலபுகளோ, அதற்குப் பின் வந்த சத்திய கொள்கையுடையவர்களோ எவரும் மறுக்கவில்லை.
அல்-ஹதீஸ் :
أَنَّ عُمَرَ ﷺ تَوَسَّلَ بِالْعَبَّاسِ ﷺ قَائِلا (( اللهُمَّ إِنَّا نَتَوَسَّلُ إِلَيْكَ بِعَمِّ نَبِيِّنا ﷺ ))

விளக்கம் : ‘‘யா அல்லாஹ் நிச்சயமாக நாங்கள் எங்களது நபி முஹம்மத் ﷺ அவர்களின் சிறிய தந்தையைப் பொருட்டாக வைத்து உன்னிடத்தில் உதவி தேடுகிறோம்’’ எனக்கூறி உமர் ؓ அவர்கள் அப்பாஸ் ؓ அவர்களைப் பொருட்டாக வைத்து அல்லாஹ்விடம் உதவி தேடினார்கள்.
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 16 : அடிமைப் பெண்ணின் ஹதீஸ் என்று அறியப்பட்ட ‘‘ஹதீஸுல் ஜாரியஹ்’’ வை பற்றி விளக்குக.

விடை : இந்த ஹதீஸ் ‘‘முழ்தரிப்’’பானதாகும். அது பலகீனமான ஹதீஸ் வகையைச்சார்ந்ததாகும். இந்த ஹதீஸை 'ஸஹீஹ்' எனக்கூறிய அறிஞர்களின் கருத்துப்படி, அந்த ஹதீஸ், ‘‘அல்லாஹ் வானத்தில் குடியிருக்கிறான்’’ என்ற கருத்தைத் தராது.

இமாம் அந்-நவவீ ؒ அவர்கள் இந்த ஹதீஸை பின்வருமாறு விளக்குகிறார்கள் :
‘‘அய்னல்லாஹ்?’’ (أيـــــن الله) என்ற வார்த்தையானது அல்லாஹ்வின் அந்தஸ்து (புகழ்ச்சி) பற்றிய கேள்வியாகும். இடத்தைப் பற்றிய கேள்வியல்ல. அதன் கருத்தாவது ‘‘அல்லாஹ்வை கண்ணியப்படுத்துவதில் உனது கொள்கை என்ன?’’ என்பதாகும். அதற்கு அந்த அடிமைப் பெண்ணின் ‘‘பி^F ஸ்ஸமா’’ (فى الســـماء) என்ற பதில், ‘‘அல்லாஹ் மிக உயர்ந்த அந்தஸ்தை உடையவன்’’ என்ற அவளின் நம்பிக்கையையே குறிக்கிறது. மாறாக நபியவர்கள் அந்தப்பெண்ணிடம் அல்லாஹ்வின் இடம் பற்றி வினவினார்கள் என்றும், அந்தப்பெண் ‘‘அல்லாஹ்

வானத்தில் குடியிருக்கிறான்'' என நினைத்துக் கூறினாள் என்றும் நம்புவது ஆகுமாகமாகமாட்டாது.

குறிப்பு : அரபு மொழியில் (أين) "அய்ன" எனும் சொல் ஒன்றின் இடம் பற்றி வினவப்படுவதற்குப் பயன்படுத்தப்படுவது போல அந்தஸ்து பற்றி வினவுவதற்காகவும் பயன்படுத்தப்படும். அதே போன்று "அஸ்ஸமாஉ" (السماء) என்ற அரபுப் பதம் "வானம்" என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதைப் போல் "உயர்ந்த அந்தஸ்து" என்ற பொருளிலும் பயன்படுத்தப்படும்.

அமீருல் மு.ஃமினீன் அலீ ﷺ அவர்கள் கூறினார்கள் :

لاَ يُقَالُ أَيْنَ لِمَنْ أَيَّنَ الْأَيْنَ

"எங்கே? எனப்படும் வினாவானது இடத்தைப் படைத்த அல்லாஹ்வைக் குறித்து வினவப்படமாட்டாது."
(அறிவித்தவர் : இமாம் அபுல் காஸிம் அல்-குஷைரீ, நூல் : அர்-ரிஸாலதுல் குஷைரிய்யஹ்)

இமாம் அபூ ஹனீபா ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

كَانَ قَبْلَ الْمَكَانِ، كَانَ ولَمْ يَكُنْ أيْنٌ وَلا خَلْقٌ وَهُوَ خَالِقُ كُلِّ شَيْءٍ

"அல்லாஹ், இடத்தைப் படைப்பதற்கு முன்னரே ஆரம்பமில்லாதத் தன்மையில் உள்ளவன். அவனோ எந்த இடமும், எந்தப் படைப்பும் இல்லாத போதே உள்ளவன், அவனே யாவற்றையும் படைத்தவன்."
(ஆதாரம் : அல்-இமாம் அபூ ஹனீபா ﷺ அவர்களுக்குரிய நூலான அல்-பிக்ஹுல்-அப்[B]ஸத்)

அல்லாஹ் கூறியுள்ளான் :

لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ ۖ ﴿١١﴾

விளக்கம் : "*எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை.*"
(அத்தியாயம் : அஷ்-ஷூறா வசனம் : 11)

முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

كَانَ اللهُ وَلَمْ يَكُنْ شَيْءٌ غَيْرُهُ

விளக்கம் : "அல்லாஹ், தன்னையன்றி எதுவுமே இல்லாத போதே ஆரம்பமில்லாத தன்மையில் உள்ளான்."
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 17 : "அல்லாஹ்வைத் திட்டிப் பேசுபவன் நிச்சயமாக காபிராவான்" என்பதே இஸ்லாத்தின் தீர்ப்பாகும். இதனை ஆதாரத்துடன் விளக்குக.

விடை : அல்-காழீ இயாழ் رحمه الله அவர்கள் "எவன் ஒருவன் அல்லாஹ்வைத் திட்டும் வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றானோ அவன் கோபத்தில் இருந்தவனாக இருப்பினும் அல்லது அவன் பரிகாசத்துக்கு பேசி இருந்தாலும் அல்லது மனவிருப்பமில்லாத நிலையில் பேசி இருப்பினும் அவன் காபிராகி விடுவான்" எனும் ஏகோபித்த முடிவான 'இஜ்மாஉ'வை பதிவு செய்துள்ளார்கள்.
அல்லாஹ் கூறியுள்ளான்:

وَلَئِن سَأَلْتَهُمْ لَيَقُولُنَّ إِنَّمَا كُنَّا نَخُوضُ وَنَلْعَبُ ۚ قُلْ أَبِاللَّهِ وَآيَاتِهِ وَرَسُولِهِ كُنتُمْ تَسْتَهْزِئُونَ ﴿٦٥﴾ لَا تَعْتَذِرُوا قَدْ كَفَرْتُم بَعْدَ إِيمَانِكُمْ ﴿٦٦﴾

விளக்கம் : "*நீங்கள் அவர்களிடம் கேட்டால், "நாங்கள் (வீண்) விவாதத்திலும், விளையாட்டிலும் மூழ்கி இருந்தோம்*"

*என்று அவர்கள் கூறுவார்கள், அதற்கு நீங்கள் கூறுங்கள் "நீங்கள் அல்லாஹ்வையும் அவனது வசனங்களையும், அவனுடைய தூதரையுமா பரிகசிக்கின்றீர்கள்? நிச்சயமாக நீங்கள் ஈமான் கொண்ட பின்னரும் காபிராகி விட்டீர்கள், உங்களுக்கு மன்னிப்பே கிடையாது."*

(அத்தியாயம் : அத்-தவ்பஹ் வசனம் : 65-66)

முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

إِنَّ الْعَبْدَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ لَا يَرَى بِهَا بَأْسًا يَهْوِي بِهَا فِي النَّارِ سَبْعِيْنَ خَرِيْفًا

விளக்கம் : "ஓர் அடியான் தனக்குக் குற்றத்தைத் தராது என நினைத்தவனாக குறிப்பிட்ட ஒரு வார்த்தையைப் பிரயோகிப்பான், அவ்வார்த்தைப் பிரயோகத்தினால் அந்த அடியான் நரகத்தில் எழுபது வருட தொலை தூரமான ஆழத்தில் போய் விழுவான்."

(அறிவித்தவர் : இமாம் அத்-திர்மிதீ)

குறிப்பு : இந்த ஆழமே நரகத்தின் அடிப்பகுதியாகும். மேலும் இது குப்ரில் ஈடுபட்டவர்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்ட இடமாகும்.

வினா 18 : முஸ்லிம்களின் அடக்கஸ்தலங்களை ஆண்களும், பெண்களும் தரிசிக்கச் செல்ல இஸ்லாம் அனுமதித்துள்ளது என்பதற்குரிய ஆதாரம் என்ன?

விடை : அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

زُوْرُوا الْقُبُوْرَ فَإِنَّهَا تُذَكِّرُكُمْ بِالْآخِرَةِ

விளக்கம் : "நீங்கள் முஸ்லிம்களின் அடக்கஸ்தலங்களைத் தரிசிக்கச் செல்லுங்கள், ஏனெனில் நிச்சயமாக அது உங்களுக்கு மறுமையை

ஞாபகமூட்டுகின்றது.''
(அறிவித்தவர் : இமாம் அல்-பைஹகீ)

வினா 19 : ஒருவர் எவ்வாறு இஸ்லாத்தில் நுழைவது?

விடை : ஒருவர் இஸ்லாத்தில் நுழைவதென்பது இரு ஷஹாதஹ் கலிமாக்களை மொழிவது கொண்டாகும். ''அல்லாஹ்விடம் நான் பாவமன்னிப்புத் தேடுகிறேன்'' எனும் கருத்தில் ''அஸ்த.்.பிருல்லாஹ்'' என்ற வார்த்தையின் மூலம் அல்ல.
(ஷஹாதஹ் கலிமா என்பது

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَـــمَّدًا رَسُوْلُ اللهِ

அதன் பொருள் :-
''உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை'' என்றும், ''முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர்'' என்றும் எனது உள்ளத்தால் உறுதியாக நம்பி, நாவால் ஏற்றுக் கொள்கிறேன் என்பதாகும்.)

நூஹ் عليه السلام அவர்கள் காபிர்களைப் பார்த்து கூறியதாக அல்குர்ஆனில் பின்வருமாறு வந்துள்ளது

فَقُلْتُ ٱسْتَغْفِرُوا۟ رَبَّكُمْ ﴿١٠﴾

விளக்கம் : ''அல்லாஹ்வையும், அல்லாஹ்வின் தூதரான என்னையும் ஏற்று, பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள் என நான் கூறினேன்.''

அதன் விளக்கம் : நபி நூஹ் عليه السلام அவர்கள் அவர்களது கூட்டாத்தாரிடம் அல்லாஹ் அவர்களை மன்னிப்பதற்காக அல்லாஹ்வையும், அவர்களையும் ஈமான் கொள்வதன் மூலம் இஸ்லாத்திற்குள்

நுழைந்து கொள்ளுமாறு வேண்டினார்கள்.

குறிப்பு : நபி நூஹ் عليه السلام அவர்கள் காபிர்களைப் பார்த்து “நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்” என்ற பொருள் தரும் “அஸ்த.்.பிருல்லாஹ்” என்ற வார்த்தையைக் கூறி அல்லாஹ்வின் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியதாக இந்த அல்-குர்ஆன் வசனத்திற்கு விளக்கம் கூறுவது தவறாகும்.

அல் ஹதீஸ்

أمرت أن أقاتل الناس حتى يشـــهدوا أن لا إله إلا الله وأني رسول الله – متفق عليه

வினா 20 : நபி முஹம்மத் ﷺ அவர்களை புகழ்வது தொடர்பான தீர்ப்பைத் தெளிவுபடுத்துக.

விடை : நபி முஹம்மத் ﷺ அவர்களை புகழ்வது முஜ்தஹித்களான இமாம்களின் ஏகோபித்த முடிவின் படி ஆகுமானதாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ﴿٤﴾

விளக்கம் : “*நிச்சயமாக (நபியே) நீங்கள் மகத்தான குணமுடையவராக இருக்கின்றீர்கள்.*”
(அத்தியாயம் : அல்-கலம் வசனம் : 4)

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَعَزَّرُوهُ وَنَصَرُوهُ ﴿١٥٧﴾

(அத்தியாயம் : அல்-அ.்.ராப் வசனம் : 157)

இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள ‘‘அஸ்ᶻஸரூஹு’’ (عـــــــزروه) என்பதன் கருத்தாவது : மு.ஃ.மீன்கள் ‘‘நபி முஹம்மத் ﷺ அவர்களைப் போற்றிப் புகழ்ந்து, மதித்து, நடக்கிறார்கள்’’ என்பதாகும்.

அல் ஹதீஸ்:

إِنّ بَعْضَ النِّسَاءِ مَدَحْنَ النّبِيَّ النّبِيّ عَلَيْهِ السّلامُ بِقَوْلِهِنَّ أَمام النَّبِيّ : يَا حَبَّذَا مُــحَمَّدٌ ﷺ مِنْ جَار

சில பெண்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் முன்னிலையில் ‘‘முஹம்மத் ﷺ அவர்கள் அயலவராக இருப்பது எவ்வளவு சிறப்புமிக்கதாய் உள்ளது’’எனக்கூறி நபி பெருமான் ﷺ அவர்களை புகழ்ந்தார்கள்.
(அறிவித்தவர் : இமாம் இப்னு மாஜஹ்)

மேலும் அநேகமான நபித்தோழர்கள் நபி ﷺ அவர்களைப் புகழ்ந்ததற்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. இவர்களில் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ؓ மற்றும் அல்-அப்பாஸ் ؓ மேலும் இவர்களல்லாத பலரையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். முஹம்மத் ﷺ அவர்கள் இவர்களின் அந்தச் செயலைத் தடுக்கவில்லை, மாறாக அதைச் சிறந்த செயலாக அங்கீகரித்துள்ளார்கள்.

வினா 21 : கப்ரின் வேதனையை ஈமான் கொள்வது பற்றி விபரிக்குக.
விடை : கப்ரின் வேதனையை ஈமான் கொள்வது கட்டாயமாகும். இது முஜ்தஹிதான இமாம்களின் ஏகோபித்த முடிவின் படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எவராவது இதனை மறுத்தால் காபிராகி விடுவார்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

ٱلنَّارُ يُعۡرَضُونَ عَلَيۡهَا غُدُوّٗا وَعَشِيّٗاۚ وَيَوۡمَ تَقُومُ ٱلسَّاعَةُ أَدۡخِلُوٓاْ ءَالَ فِرۡعَوۡنَ أَشَدَّ ٱلۡعَذَابِ ٤٦

விளக்கம் : "*பிர்அவ்னும், அவனைப் பின் துயர்ந்தவர்களும் அவர்கள் கப்ருகளில் உள்ள போதே அதிகாலையிலும், அந்தி மாலையிலும் நரக வேதனை அவர்களுக்கு காண்பிக்கப்படுகின்றது. மேலும் இறுதித்தீர்ப்பு நாளில் "அவர்களை நரகத்தின் மிகக் கொடூரமான வேதனையில் நுழைவிக்குமாறு" கூறப்படும்.*"
(அத்தியாயம் : ஹ[GH]ாபிர் வசனம் : 46)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

اسْتَعِيْذُوْا بِاللهِ مِنْ عَذَابِ الْقَبْرِ

விளக்கம் : "கப்ருடைய வேதனையிலிருந்து நீங்கள் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்."
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 22 : முதல் படைப்பு எது?

விடை : முதல் படைப்பு தண்ணீராகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَجَعَلۡنَا مِنَ ٱلۡمَآءِ كُلَّ شَيۡءٍ حَيٍّۚ ٣٠

விளக்கம் : "*உயிர் உள்ள அனைத்தையும் நாம் தண்ணீரிலிருந்தே படைத்துள்ளோம்.*"
(அத்தியாயம் : அல்-அன்பியாஉ வசனம் : 30)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள்

கூறியுள்ளார்கள் :

كُلُّ شَيْءٍ خُلِقَ مِنَ الْمَاءِ

விளக்கம் : "அனைத்துப் படைப்புக்களும் தண்ணீரிலிருந்தே படைக்கப்பட்டுள்ளது."
(அறிவித்தவர் : இமாம் இப்னு ஹிப்பான்)

வினா 23 : பித்அஹ்வின் வகைகள் பற்றி விபரிக்குக.
"குர்ஆன், ஹதீஸுக்கு நேர்படும் பித்அஹ்கள் உள்ளன" என்பதற்கு ஆதாரம் என்ன?

விடை : மொழி ரீதியாக பித்அஹ் எனும் சொல் முன் உதாரணமின்றி ஏதாவது ஒன்றை புதிதாக அறிமுகப்படுத்துவதைக் குறிக்கின்றது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பித்அஹ்வானது

01. வழிகாட்டலை உடைய பித்அஹ்
02. வழிகேட்டை உடைய பித்அஹ்

என்ற இரு பிரிவாக பிரிகின்றது.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَرَهْبَانِيَّةً ٱبْتَدَعُوهَا مَا كَتَبْنَٰهَا عَلَيْهِمْ إِلَّا ٱبْتِغَآءَ رِضْوَٰنِ ٱللَّهِ ﴿٢٧﴾

விளக்கம் : "*உலகத்தின் சகல இன்பங்களையும் துறந்து விடும் படியான துறவித்தனத்தை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை. எனினும் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை அடைய விரும்பி அவர்களே அதனை அவர்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.*"
(அத்தியாயம் : அல்-ஹதீத் வசனம் : 27)

குறிப்பு : அல்லாஹ்வின் தூதர் ஈஸா عليه السلام அவர்களைப்

பின்தொடர்ந்த முஸ்லிம்கள் தங்களுக்கு விதியாக்கப்படாத செயலாகிய இன்பங்களைத் துறந்து அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தல் என்ற இந்த செயலை தாங்களே உருவாக்கிச் செய்தனர். இதை அல்லாஹ் பாராட்டியுள்ளான்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

مَنْ سَنَّ فِى الْإِسْلَامِ سُنَّة حَسَنَة فَلَهُ أَجْرُهَا وَ أَجْرُ مَنْ عَمِلَ بِهَا مِنْ بَعْدِهِ

விளக்கம் : “யார் இஸ்லாத்தில் (அல் குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் முரண்படாத முறையில்) நற்கருமமொன்றை உருவாக்குவாரோ அவருக்கு அதை உருவாக்கியதற்கான நன்மையும், அவருக்குப்பின் யாரெல்லாம் அதைச் செய்து வருவார்களோ அதன் நன்மையும் உண்டு.”
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

குறிப்பு : நபித்தோழர்களும் அவர்களைப் பின் துயர்ந்தவர்களும் இஸ்லாத்தில் நன்மை தரக்கூடிய பல புதிய விடயங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். முஸ்லிம் உம்மத்தும் இவற்றை ஏக மனதுடன் அங்கீகரித்து வந்துள்ளனர்.

இவ்வாறு புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட விடயங்களுக்குப் பின்வருவனவற்றை உதாரணமாகக் கூறலாம்.

- ⇨ பள்ளிவாசல்களில் மிஹ்ராப் கட்டுதல்.
- ⇨ வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்காக இரண்டாவது பாங்கைக் கூறுதல்.
- ⇨ அல்-குர்ஆனுக்குப் புள்ளி வைத்தல்.
- ⇨ நபி முஹம்மத் ﷺ அவர்களின் பிறந்த

தினத்தைக் கொண்டாடுதல்.

வினா 24 : சூனியம் செய்வதைப் பற்றி விபரிக்குக.

விடை : சூனியம் செய்வது ஹறாமாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَمَا كَفَرَ سُلَيْمَٰنُ وَلَٰكِنَّ ٱلشَّيَٰطِينَ كَفَرُواْ يُعَلِّمُونَ ٱلنَّاسَ ٱلسِّحْرَ ﴿١٠٢﴾

விளக்கம் : *“ஸுலைமான் عليه السلام அவர்கள் காபிராகவில்லை. என்றாலும் மனிதர்களுக்கு சூனியத்தை கற்றுக் கொடுக்கும் ஷைதான்களே காபிர்களாகிவிட்டனர்.”*
(அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 102)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

اجْتَنِبُوْا السَّبْعَ الْمُوبِقَاتِ قيل : وما هي يارسول الله ؟ قال : (الشرك بالله والسحر..)

விளக்கம் : மனிதர்களை நாசத்தில் வீழ்த்தக்கூடிய ஏழு விடயங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள். அதற்கு ஸஹாபாக்கள் அவை எது? எனக்கேட்ட போது “அல்லாஹ்விற்கு இணைவைத்தல், சூனியம் செய்தல்” போன்ற ஏழு விடயங்களையும் கூறினார்கள்.
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

வினா 25 : “அல்லாஹ்” என்ற பெயர் நாமம் எழுதப்பட்டுள்ள தாள் ஒன்றை, அவமரியாதை செய்யும் நோக்கில் அசுத்தமானவைகளில் எறிபவர் காபிராகிவிடுவார் என்பதற்குரிய ஆதாரம் என்ன?

விடை : அல்லாஹ்வின் பெயர் நாமம் பொதிந்துள்ள ஒரு தாளை அசுத்தமான இடத்தில் எறிவது ஹறாமாகும். யாராவது அவ்வாறு இழிவுபடுத்தும் நோக்கில் செய்தால் அவர் காபிராகி விடுவார்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

قُلْ أَبِٱللَّهِ وَءَايَٰتِهِۦ وَرَسُولِهِۦ كُنتُمْ تَسْتَهْزِءُونَ ﴿٦٥﴾ لَا تَعْتَذِرُوا۟ قَدْ كَفَرْتُم بَعْدَ إِيمَٰنِكُمْ ﴿٦٦﴾

விளக்கம் : "*நீங்கள் கூறுங்கள் : நீங்கள் அல்லாஹ்வையும் அவனது வசனங்களையும், அவனுடைய தூதரையுமா பரிகசிக்கின்றீர்கள்? நிச்சயமாக நீங்கள் ஈமான் கொண்ட பின்னரும் காபிராகி விட்டீர்கள், உங்களுக்கு மன்னிப்பே கிடையாது.*"
(அத்தியாயம் : அத்-தவ்பஹ் வசனம் : 65-66)

இமாம் இப்னு ஆபிதீன் ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள்: "யாராவது அல்-குர்ஆன் பிரதியை இழிவுபடுத்தும் நோக்கமின்றி அதை அசுத்தமான இடங்களில் எறிந்தாலும் அவர் காபிராகி விடுகிறார். ஏனெனில் நிச்சயமாக அவரின் இச்செயல் இழிவுபடுத்துவதையே அறிவிக்கின்றது."

வினா 26 : நேர்ச்சை வைப்பது பற்றிய இஸ்லாமியத் தீர்ப்பு என்ன?

விடை : இஸ்லாம் அங்கீகரித்த வணக்கங்களைக் கொண்டு நேர்ச்சை வைப்பதற்கு அனுமதியுண்டு, அதை நிறைவேற்றுவதும் கட்டாயக் கடமையாகும். ஆனால் பாவமான காரியங்களைக் கொண்டு நேர்ச்சை வைப்பதற்கு இஸ்லாத்தில்

அனுமதியில்லை, அதை நிறைவேற்றுவது கடமையுமல்ல.

நேர்ச்சை என்பது : தனக்கு கடமையில்லாத ஒரு வணக்கத்தைத் தன் மீது கட்டாயப்படுத்திக் கொள்வதாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

يُوفُونَ بِٱلنَّذۡرِ ۝٧

விளக்கம் : "*நல்லவர்கள் அவர்களுடைய நேர்ச்சைகளை நிறைவேற்றிவிடுவார்கள்.*"
(அத்தியாயம் : அத்-தஹ்ரு வசனம் : 7)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

مَنْ نَذَرَ أَنْ يُطِيْعَ اللهَ فَلْيُطِعْهُ ، وَمَنْ نَذَرَ أَنْ يَعْصِيَهُ فَلا يَعْصِهِ

விளக்கம் : "யாராவது அல்லாஹ்வுக்கு வழிப்பட நேர்ச்சை வைத்தால் அவனுக்கு வழிப்படட்டும். மாறாக யாராவது அவனுக்கு மாறு செய்ய நேர்ச்சை வைத்திருந்தால் அவனுக்கு மாறு செய்ய வேண்டாம்."
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 27 : நிச்சயமாக "பெண்ணின் குரல் மறைக்கப்பட வேண்டிய அவ்ரத் அல்ல" என்பதற்குரிய ஆதாரம் என்ன?

விடை : அல்லாஹ் கூறியுள்ளான் :

وَقُلۡنَ قَوۡلٗا مَّعۡرُوفٗا ۝٣٢

விளக்கம் : "*பெண்களே நீங்கள் நல்ல வார்த்தைகளைக் கூறுங்கள்.*"
(அத்தியாயம் : அல்-அஹ்ஸாப் வசனம் : 32)

அல் ஹதீஸ் : அல்-அஹ்னப் இப்னு கைஸ் ﵁ அவர்கள் கூறியுள்ளார்கள் :
"நான் அபூபக்ர் ﵁, உமர் ﵁, உஸ்மான் ﵁, அலீ ﵁ போன்றவர்களின் வாயால் ஹதீஸ்களை செவிமடுத்துள்ளேன். என்றாலும் ஆயிஷா ﵂ அவர்களின் வாயால் கூறப்பட்ட ஹதீஸ்களைச் செவிமடுத்ததைப் போன்று வேறு எவரிடமிருந்தும் நான் செவிமடுக்கவில்லை."

அறிவித்தவர் : இமாம் அல்-ஹாகிம், நூல் : அல்-முஸ்தத்ரக்.

வினா 28 : "அல்லாஹ்வின் பேச்சு" என்ற தன்மையை பற்றி விபரிக்குக.

விடை : அல்லாஹ், எங்களுடைய பேச்சைப் போன்றல்லாமல் பேசக்கூடியவன். அவனுடைய பேச்சு என்பது எவ்வித எழுத்துடையதாகவோ, எவ்வித சப்தத்தையுடையதாகவோ, எவ்வித மொழியுடையதாகவோ இல்லை.
அல்லாஹ் கூறியுள்ளான் :

وَكَلَّمَ ٱللَّهُ مُوسَىٰ تَكۡلِيمًا ١٦٤

விளக்கம் : "*நிச்சயமாக அல்லாஹ் மூஸா ﵇ அவர்களோடு பேசினான்.*"
(அத்தியாயம் : அந்-நிஸாஉ வசனம் : 164)

இமாம் அபூஹனீபா ﵁ அவர்கள் கூறியுள்ளார்கள் :

وَيَتَكَلَّمُ لا كَكَلامِــنا وَنَحْنُ نَتَكَلَّمُ بِالْآلَاتِ والْحُرُوْفِ وَ اللهُ تَعالى يَتَكَلَّمُ بِلا ءَالَةٍ وَلا حُرُوْفٍ

“அல்லாஹ் பேசுவது நாங்கள் பேசுவதைப் போன்றல்ல. நாங்கள் நாவு, உதடு போன்ற உறுப்புகளின் துணையுடனும், எழுத்துக்களைக் கொண்டும் பேசுகிறோம். அல்லாஹ் நாவு, உதடு போன்ற எந்த உறுப்புமின்றி, எழுத்துக்களுமின்றிப் பேசுகின்றான்.”
(நூல் : அல்-பிக்ஹுல் அப்[B]ஸத்)

வினா 29 :

ٱلرَّحۡمَٰنُ عَلَى ٱلۡعَرۡشِ ٱسۡتَوَىٰ ۝٥

என்ற வசனத்தின் விளக்கம் யாது?

விடை : இமாம் மாலிக் ﵁ அவர்கள் கூறியுள்ளார்கள் : “(மேற்கூறப்பட்ட வசனத்தில் இடம்பெற்றுள்ள) 'இஸ்தவா' என்பது அல்லாஹ் தன்னை வர்ணித்தது போன்று 'இஸ்தவா' என்பதாகவே கூறப்படும். அப்பண்பிற்கு விதம் இருப்பதாக கூறப்படமாட்டாது. ஏனெனில் விதம் பெறுதல் என்பது அவனுக்கு இல்லை. விதம் பெறுதல் என்பது படைப்புகளின் தன்மையாகும். உட்காருதல், தரிபடுதல், இடம் எடுத்தல், திசை பெறுதல் போன்ற விதங்களையுடைய தன்மைகள் படைப்புகளுக்குரியதாகும்.”

இமாம் அல்-குஷைரீ ﵀ அவர்கள் 'இஸ்தவா' என்ற சொல்லுக்கு பாதுகாத்தான், கட்டுப்பாட்டில் வைத்தான், நிலைபெறச் செய்தான் என்று விளக்கமளித்துள்ளார்கள்.

குறிப்பு : 'இஸ்தவா' என்ற அறபுப் பதம் 15 கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. அக்கருத்துக்களில் அல்லாஹ்வுக்குப் பயன்படுத்தத் தகுதியான சில கருத்துக்களும், அவனுக்கு அறவே பயன்படுத்தத் தகுதியில்லாத சில கருத்துக்களும் உள்ளன.

ஆகையால் அவன் அர்ஷில் அமர்ந்து கொண்டிருக்கிறான் அல்லது அர்ஷில் தரிபாடு கொண்டுள்ளான் என நம்பிக்கை கொள்ளவே கூடாது. ஏனென்றால் அல்லாஹ் அர்ஷில் உட்கார்ந்திருக்கிறான் என்ற நம்பிக்கையானது யூதர்களினது நம்பிக்கையாகும். மேலும் அவ்வாறு நம்புவதினால் பின்வரும் அல்லாஹ்வின் வசனத்தை பொய்ப்பித்ததாக அமைந்துவிடும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

فَلَا تَضۡرِبُواْ لِلَّهِ ٱلۡأَمۡثَالَۚ ﴿٧٤﴾

விளக்கம் : ***"அல்லாஹ்வுக்கு அவனது படைப்புகளின் தன்மைகளைக் கொண்டு உவமானம் கூற வேண்டாம்."***
(அத்தியாயம் : அந்-நஹ்ல் வசனம் : 74)

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَبَرَزُواْ لِلَّهِ ٱلۡوَٰحِدِ ٱلۡقَهَّارِ ﴿٤٨﴾

விளக்கம் : ***"அனைத்தையும் அதிகாரம் செய்யக்கூடிய, இணையின்றித் தனித்த அல்லாஹ்வுக்காக அவர்கள் வெளிப்படுவார்கள்."***
(அத்தியாயம் : இப்றாஹீம் வசனம் : 48)

அலீ رضي الله عنه அவர்கள் கூறியுள்ளார்கள் :

إِنَّ اللهَ خَلَقَ الْعَرْشَ إِظْهَارًا لِقُدْرَتِهِ وَلَمْ يَتَّخِذْهُ مَكَانًا لِذَاتِهِ

"நிச்சயமாக அல்லாஹ் அர்ஷை தனது வல்லமையை வெளிப்படுத்துவதற்காகவே படைத்துள்ளான். அவனுக்கு அதை இடமாக எடுத்துக் கொள்வதற்கு அல்ல."
(அறிவித்தவர் : இமாம் அபூ மன்ஸூர் அல்-பக்தாதீ)

வினா 30 : 'கதர்' (القدر) பற்றி விபரிக்குக.

விடை : இவ்வுலகில் ஏற்படும் நல்ல விடயமாயினும், கெட்ட விடயமாயினும், வழிப்படுவதாயினும் அல்லது மாறு செய்வதாயினும், ஈமான் கொள்வதாயினும் அல்லது நிராகரிப்பதாயினும் அல்லாஹ்வின் ஏற்பாட்டிற்கும், நாட்டத்திற்கும், அறிவிற்கும் உட்பட்டே நிகழ்கின்றன.

- ⇨ நலவுகள், ஈமான் கொள்ளல், அல்லாஹ்விற்கு கட்டுப்படல் போன்றவை அல்லாஹ்வின் திருப்பொருத்தத்துடன் அவனது ஏற்பாட்டின் பிரகாரம் நிகழ்கின்றன.

- ⇨ கெடுதிகள், குப்ர் ஏற்படுதல், அல்லாஹ்விற்கு மாறுசெய்தல் போன்றன அல்லாஹ்வின் திருப்பொருத்தமின்றி, அவனின் ஏற்பாட்டின் பிரகாரம் நிகழ்கின்றன.

நடைபெறும் மோசமான கருமங்களினால், அல்லாஹ்வின் பண்பான 'ஏற்பாடு செய்தல்' எனும் பண்பு மோசமானது என சொல்லப்படமாட்டாது.

அல்லாஹ் கூறியுள்ளான் :

إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ ﴿٤٩﴾

விளக்கம் : "*நிச்சயமாக நாம் அனைத்தையும் விதிப்பிரகாரமே படைத்துள்ளோம்.*"
(அத்தியாயம் : அல்-கமர் வசனம் : 49)

முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

كُلُّ شَيْءٍ بِقَدَرٍ حَتَّى العَجْزِ وَالْكَيْسِ

விளக்கம் : "விவேகமில்லாத தன்மை, விவேகமுள்ள தன்மை உட்பட அனைத்தும் விதிப்பிரகாரமே நிகழ்கிறது."
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

வினா 31 : மஹ்ரமல்லாத பெண்ணை ஒரு ஆண் கைலாகு (முஸாப[F]ஹா) செய்வது ஹறாம் என்பதற்குரிய ஆதாரம் என்ன?

விடை : நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

لَأَنْ يُطْعَنَ أَحَدُكُمْ بِحَدِيْدَةٍ فِي رَأْسِهِ خَيْرٌ لَهُ مِنْ أَنْ يَمَسَّ امْرَأَةً لَا تَحِلُّ لَهُ

விளக்கம் : "உங்களில் ஒருவர் தனக்கு ஹலாலாகாத பெண்ணைத் தொடுவதை விட தனது தலையில் கூரான ஆயுதத்தால் குத்தப்படுவது மிகச் சிறந்ததாகும்."
(அறிவித்தவர் : இமாம் அத்-தாரகுத்னீ)

நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

وَزِنَى الْيَدِ الْبَطْشُ

விளக்கம் : "கையின் விபச்சாரம் (தனக்கு ஹலாலாகாத ஒரு அந்நியப் பெண்ணை)

தொடுவதினால் ஏற்படுகிறது.''
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 32 : மரணித்தவர் பெயரில் அல்-குர்ஆன் ஓதுவது பற்றிய மார்க்கத் தீர்ப்பை விபரிக்குக.

விடை : மரணித்தவர் பெயரில் அல்-குர்ஆன் ஓதுவதை இஸ்லாம் அனுமதித்துள்ளது.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَٱفْعَلُواْ ٱلْخَيْرَ ﴿٧٧﴾

விளக்கம் : ''*நீங்கள் நல்லதைச் செய்து கொண்டிருங்கள்.*''
(அத்தியாயம் : அல்-ஹஜ் வசனம் : 77)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

اقْرَءُوْا عَلَى مَوْتَاكُمْ يس

விளக்கம் : ''உங்களில் மரணித்தவரின் பெயரில் சூறா யாஸீனை ஓதுங்கள்.''
அறிவித்தவர் : இமாம் அல்-ஹாபிழ் இப்னு ஹிப்பான். இவர் இந்த ஹதீஸை ஸஹீஹ் எனக்கூறியுள்ளார்.

சத்தியக் கொள்கையுடைய முஜ்தஹித்களான அறிஞர்கள், மரணித்தவர்களுக்காக அல்-குர்ஆன் ஓத முடியும் என்றும் அது பயனளிக்கும் என்றும் ஏகோபித்துக்கூறியுள்ளார்கள்.
இமாம் ஷாபிஈ ؓ அவர்கள் கூறியுள்ளார்கள் :

لَوْ قَرَءُوْا عِنْدَ قَبْرِهِ شَيْئًا مِنَ الْقُرْآنِ كَانَ حَسَنًا وَلَوْ قَرَءُوا الْقُرْآنَ كُلَّهُ كَانَ أَحْسَنَ

''முஃமீன்கள், ஒரு முஃமினின் கப்ருக்கு சென்று, அல்-

குர்ஆனின் ஏதோ ஒரு பகுதியை ஓதுவது சிறந்ததாகும். அத்துடன் அவர்கள் அல்-குர்ஆன் முழுவதையும் ஓதிக்கொள்வது மிகச் சிறந்ததாகும்.'' இதை இமாம் நவவீ ﷺ அவர்கள் 'றியாலுஸ்-ஸாலிஹீன்' என்ற கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

வினா 33 : மரணித்த ஒருவர் தர்மத்தின் மூலம் பயனடைய முடியும் என்பதற்குரிய ஆதாரம் என்ன?

விடை : அல் ஹதீஸ் :-

إِذا مَاتَ ابْنُ آدَمَ انْقَطَعَ عَمَلُهُ إلّا مِنْ ثَلَـاثٍ صَدَقَةٍ جَـارِيَةٍ وَعِلْمٍ يُنْتَفَعُ بِهِ وَوَلَدٍ صَالِحٍ يَدْعُوْ لَهُ

விளக்கம் : ''ஒருவர் மரணித்து விட்டால் அவரின் நிலையான தர்மம், பயனளிக்கும் கல்வி, அவருக்காக பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை ஆகிய மூன்று விடயங்களில் நின்றும் தவிர அவரது அமல் துண்டித்துவிடும்.''
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

இதன் கருத்தாவது :- ஒரு முஸ்லிம் அவர் காரணமாக இருந்த விடயங்களில் அவரது மரணத்திற்கு பின்னால் அவருக்கு பிரயோஜனம் அளிக்கக்கூடியவைகள் மேற்குறிப்பிட்ட மூன்றுமேயாகும். இதையே பின்வரும் அல்-குர்ஆன் வசனமும் தெளிவுபடுத்துகிறது :

وَأَن لَّيْسَ لِلْإِنسَٰنِ إِلَّا مَا سَعَىٰ ﴿٣٩﴾

(அத்தியாயம் : அந்-நஜ்ம் வசனம் : 39)
அதாவது ஒருவர் தான் செய்த நற்கருமங்களின் மூலமும் பயனடைவார், மேலும் அல்லாஹ்வின் பேரருளினால் தான் செய்யாமல் பிறர் தனக்கு

உபகாரமாக அளித்த நற்கருமத்தின் மூலமும் பயனடைவார்.

இதற்கு எடுத்துக்காட்டாக : மரணித்த ஒருவர், பிறரால் நடாத்தப்படும் ஜனாஸஹ் தொழுகையின் மூலம் பயனடைவதைக் குறிப்பிடலாம்.
மேலும் நபி ﷺ அவர்கள் பிறருக்கு செய்த பிரார்த்தனை மூலம் பயனடைவதைக் குறிப்பிடலாம். அதற்கு உதாரணமாக இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களுக்கு

اَللّٰهُمَّ عَلِّمْهُ الْحِكْمَةَ وَتَأْوِيْلَ الْكِتَابِ

“யாஅல்லாஹ், இவர்களுக்கு ஞானத்தையும் அல்-குர்ஆனுக்கு த.்.வீல் செய்யும் அறிவையும் கற்றுக்கொடுப்பாயாக!” என்று நபி ﷺ அவர்கள் பிரார்த்தித்ததன் மூலம் அவர்கள் பிரயோசனம் அடைந்ததை கூறலாம்.
குறிப்பு : இங்கு இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்கள், தனது செயலல்லாத முஹம்மது ﷺ அவர்களின் செயல் மூலம் பிரயோஜனம் பெற்றுள்ளார்கள்.
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ, இப்னு மாஜஹ், அல்-ஹாபிழ் இப்னுல் ஜௌஸீ)

வினா 34 : ரமழான் மாத இரவுத்தொழுகையை 11 ரக்அத்துக்களை விட அதிகரித்து தொழ முடியும் என்பதற்குரிய ஆதாரம் யாது?

விடை : அல்லாஹ் கூறியுள்ளான் :

وَٱفْعَلُوا۟ ٱلْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ۩ ﴿٧٧﴾

விளக்கம் : “***நீங்கள் நல்லதைச் செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றி பெறலாம்.***”

(அத்தியாயம் : அல்-ஹஜ் வசனம் : 77)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

صَلَاةُ اللَّيْلِ مَثْنَى مَثْنَى

விளக்கம் : “இரவுத்தொழுகையை இரண்டு இரண்டு ரக்அத்களாகத் தொழுது கொள்ளுங்கள்.”
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

الصَّلَاةُ خَيْرُ مَوْضُوْعٍ فَمَنْ شَاءَ اسْتَقَلَّ ومَنْ شَاءَ اسْتَكْثَرَ

விளக்கம் : “நபிலான தொழுகை என்பது நற்செயலொன்றாகும். அதைக் குறைத்துத் தொழ விரும்புபவர் குறைத்துத் தொழலாம். அதை அதிகரித்துத் தொழ விரும்புபவர் அதிகரித்துத் தொழலாம்.”
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

வினா 35 : (துDH ப்F) ரபான் என்ற கருவியைப் பயன் படுத்துவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரம் என்ன?

விடை : அல் ஹதீஸ் :

أَنَّ امْرَأَةً قَالَتْ لِلرَّسُوْلِ : إِنِّيْ نَذَرْتُ إِنْ رَدَّكَ اللهُ سَالِمًا أَنْ أَضْرِبَ بِالدُّفِّ

بَيْنَ يَدَيْكَ ، قَالَ : إِنْ كُنْتِ نَذَرْتِ فَأَوْفِيْ بِنَذْرِكِ

விளக்கம் : நிச்சயமாக ஒரு பெண்மணி, அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களிடத்தில், “அல்லாஹ் உங்களை இந்த யுத்தத்திலிருந்து

பாதுகாப்பாக திரும்பிவரச் செய்தால் உங்கள் முன்னிலையில் துDH.Fப் எனும் ரபான் அடிப்பதற்கு நேர்ச்சை வைத்துள்ளேன்'' எனக்கூறினாள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் ''நீங்கள் நேர்ச்சை வைத்திருந்தால் உங்களது நேர்ச்சையை நிறைவேற்றிவிடுங்கள்'' என பதிலளித்தார்கள்.
(அறிவித்தவர் : இமாம் அபூதாவூத்)

வினா 36 : நபிமார்களிலும், ரஸூல்மார்களிலும் முதன்மையானவர் யார்?

விடை : நபிமார்களிலும், ரஸூல்மார்களிலும் முதன்மையானவர் நபி ஆதம் عليه السلام அவர்களாகும்.
அல்லாஹ் கூறியுள்ளான் :

إِنَّ ٱللَّهَ ٱصْطَفَىٰٓ ءَادَمَ ﴿٣٣﴾

விளக்கம் : ''***நிச்சயமாக அல்லாஹ் ஆதம் عليه السلام அவர்களை நபியாக தேர்ந்தெடுத்துள்ளான்.***''
(அத்தியாயம் : ஆலு-இம்ரான் வசனம் : 33)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

ءَادَمُ فَمَنْ سِوَاهُ مِنَ الْأَنْبِيَاءِ تَحْتَ لِوَائِي يَوْمَ الْقِيَامَةِ

விளக்கம் : ''மறுமை நாளில் ஆதம் عليه السلام அவர்களும் அவர்களல்லாத ஏனைய நபிமார்களும் எனது கொடியின் கீழ்தான் இருப்பார்கள்.''
(அறிவித்தவர் : இமாம் அத்-திர்மிதீ)

வினா 37 : நபிமார்களிடத்தில் கட்டாயமாக இருக்கவேண்டிய தன்மைகளையும், மேலும் அவர்களிடம் இருக்கவே முடியாத தன்மைகளையும்

குறிப்பிடுக.

விடை : நிச்சயமாக நபிமார்கள் உண்மை, நேர்மை, விவேகம், பத்தினித்தனம், வீரம், தெளிவான பேச்சு போன்ற பண்புகளையுடையவர்களாக இருப்பது அவசியமாகும். நபித்துவம் கிடைக்க முன்பும், கிடைத்த பின்பும் பொய், சதிமோசடி, ஆபாசமான அல்லது கீழ்த்தரமான பண்புகள், விபச்சாரம், ஏனைய பெரும் பாவங்கள் மற்றும் கொள்கை மறுப்பு (குப்ர்) போன்றவை அவர்களிடம் இருக்கவே முடியாத தன்மைகளாகும்.
அல்லாஹ் கூறியுள்ளான் :

وَكُلًّا فَضَّلْنَا عَلَى ٱلْعَٰلَمِينَ ﴿٨٦﴾

விளக்கம் : ***"நபிமார்கள் அனைவரையும் உலகத்தாரை விட மேன்மையாக்கி வைத்துள்ளோம்."***
(அத்தியாயம் : அல்-அன்ஆம் வசனம் : 86)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

مَا بَعَثَ اللهُ نَبِيًّا إِلَّا حَسَنَ الْوَجْهِ حَسَنَ الصَّوْتِ

விளக்கம் : "அல்லாஹ் அனைத்து நபிமார்களையும் முகம் அழகுடையவர்களாகவும், குரல் வளமுடையவர்களாகவுமே அனுப்பி வைத்துள்ளான்."
(அறிவித்தவர் : இமாம் அத்-திர்மிதீ)

வினா 38 :

لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ﴿٣﴾

என்ற வசனத்தின் விளக்கம் யாது?

விடை : இதனுடைய விளக்கமாவது :-

“*அல்லாஹ்விலிருந்து எதுவும் பிரிந்து வெளியாகவுமில்லை. மேலும் அல்லாஹ் ஏதோ ஒரு மூலப் பொருளிலிருந்து பிரிந்து வெளியானவனும் இல்லை*” என்பதாகும்.

எனவே ஏதோ ஒன்றிற்குள்ளால் அவன் உட்புகுந்திருத்தல், அவனிலிருந்து வேறொன்று பிரிந்து வெளிப்படுதல் மற்றும் அவனுக்குள்ளே வேறொன்று உட்புகுதல் போன்றவைகள் அல்லாஹ்வுக்கு இருக்கக்கூடாத, சாத்தியமற்ற தன்மைகளாகும்.

ஜஃபர் அஸ்-ஸாதிக் ﵁ அவர்கள் கூறியுள்ளார்கள்:

مَنْ زَعَمَ أَنَّ اللهَ فِيْ شَيْءٍ أَوْ مِنْ شَيْءٍ أَوْ عَلى شَيْءٍ فَقَدْ أَشْرَكَ

“யாராவது நிச்சயமாக அல்லாஹ் ஏதோ ஒன்றினுள் உள்ளான் என்றோ அல்லது அவன் ஏதோ ஒன்றிலிருந்து வந்தவன் என்றோ அல்லது அவன் ஏதோ ஒன்றின் மீது தரிபட்டுள்ளான் என்றோ நம்பிக்கை கொண்டிருந்தால் அவர் (ஷிர்க்) இணை வைத்தவராகிவிட்டார்.”

(அறிவித்தவர் : இமாம் அல்-குஷைரீ - நூல் : அர்-ரிஸாலதுல் குஷைரிய்யஹ்)

வினா 39 : அதானுக்குப் பின் நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்வதை இஸ்லாம் அனுமதித்துள்ளது என்பதற்கான ஆதாரம் என்ன?

விடை : நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது அதானுக்குப் பின் ஸலவாத் கூறுவது இஸ்லாம் அனுமதித்த விடயமாகும். அதனை ஹறாமெனக் கூறுபவரை கண்டுகொள்ளப்படமாட்டாது.

அல்லாஹ் கூறியுள்ளான் :

إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦

விளக்கம் : ''*நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது மலக்குகளும் நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் கூறுகின்றனர். ஈமான் கொண்டவர்களே நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் கூறுங்கள்.*''
(அத்தியாயம் : அல்-அஹ்ஸாப் வசனம் : 56)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

إِذا سَمِعْتُمُ المُؤَذِّنَ فَقُوْلُوْا كَمَا يَقُوْلُ ثُمَّ صَلُّوْا عَلَيَّ

விளக்கம் : ''முஅத்தின் அதான் சொல்வதை நீங்கள் கேட்டால் அவர் கூறுவது போன்று நீங்கள் கூறிவிட்டு பின்னர் என் மீது ஸலவாத்துக் கூறுங்கள்.''
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

مَنْ ذَكَرَنِي فَلْيُصَلِّ عَلَيَّ

விளக்கம் : ''யாராவது என்னை நினைவு கூறினால் அவர் என் மீது ஸலவாத் கூறிக்கொள்ளட்டும்.''
அறிவித்தவர் : ஹதீஸ் கலையில் 'அல்-ஹாபிழ்' என்ற தரத்தை அடைந்த இமாம் அஸ்ஸஹாவீ.

வினா 40 : 'ரித்[DH]தத்' (الـــــردة) அதாவது இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விடுதல் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

விடை : 'ரித்[DH]தத்' என்றால் இஸ்லாமியக் கொள்கை மறுப்பு மூலம் இஸ்லாம் துண்டிக்கப்படுவதாகும்.

இஸ்லாமியக் கொள்கை மறுப்பு அதாவது 'ரித்[DH]தத்' பின்வரும் மூன்று வகையில் ஏதாவது ஒன்றைக் கொண்டு நிகழலாம் :-

01. வார்த்தை ரீதியான 'ரித்[DH]தத்' :

- ➢ அல்லாஹ், நபிமார்கள், இஸ்லாம் போன்றவைகளைத் திட்டுவதை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

குறிப்பு : ஒருவர் கோபமாக இருக்கும் நிலையில் மேற்குறித்தவைகளைத் திட்டினாலும் அவர் முர்தத்தாகி இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுவார்.

02. செயல் ரீதியான 'ரித்[DH]தத்' :

- ➢ அல்-குர்ஆன் பிரதியை அசுத்தமானவைகளில் வீசுதல் அல்லது அதனை மிதித்தல் போன்றவைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

03. நம்பிக்கை சார்ந்த 'ரித்[DH]தத்' :

- ➢ நிச்சயமாக அல்லாஹ் உடல் அல்லது ரூஹ் எனும் தன்மையுடையவன் அல்லது அர்ஷில் அமர்ந்திருக்கின்றான் அல்லது வானத்தில் தரிபட்டிருக்கின்றான் அல்லது யதார்த்தத்தில் அனைத்து இடங்களிலும் இருக்கின்றான் அல்லது யதார்த்தத்தில் ஏதோ ஒரு திசையில் இருக்கின்றான் என்ற நம்பிக்கைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَلَقَدْ قَالُوا۟ كَلِمَةَ ٱلْكُفْرِ وَكَفَرُوا۟ بَعْدَ إِسْلَٰمِهِمْ ﴿٧٤﴾

விளக்கம் : ''*அவர்கள் இஸ்லாமியக் கொள்கையை நிராகரிப்புச் செய்யும் வார்த்தையைப் பேசி விட்டனர். எனவே முஸ்லிம்களாக இருந்த அவர்கள் அல்லாஹ்வை நிராகரித்தவர்களாகி விட்டனர்.*''

(அத்தியாயம் : அத்-தவ்பஹ் வசனம் : 74)

அல்லாஹ் கூறியுள்ளான் :

لَا تَسْجُدُوا۟ لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ ﴿٣٧﴾

விளக்கம் : ''*நீங்கள் சூரியனுக்கும், சந்திரனுக்கும் சுஜூத் செய்ய வேண்டாம்.*''

(அத்தியாயம் : பு[F]ஸ்ஸிலத் வசனம் : 37)

முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

إِنَّ الْعَبْدَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ مَا يَتَبَيَّنُ فِيْهَا يَهْوِيْ بِهَا فِـــــى النَّارِ أَبْعَدَ مِمَّا بَيْنَ الْمَشْرِقِ والْمَغْرِبِ

விளக்கம் : ''நிச்சயமாக அடியான் தான் உணராமல் குறித்த ஒரு வார்த்தையைப் பேசுவான். அதனால் அவன் நரகில் கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையில் இருக்கும் தூரத்தை விட மிகத் தூரமான ஓர் இடத்தில் போய் விழுவான்.''

(அறிவித்தவர்கள் : இமாம் முஸ்லிம், இமாம் அல்-புஹாரி)

வினா 41 : நபி முஹம்மத் ﷺ அவர்களின் சங்கைமிகு பிறந்த தினத்தைக் கொண்டாடுவதை இஸ்லாம் அனுமதித்துள்ளது என்பதற்கான ஆதாரம் என்ன?

விடை : அல்லாஹ் கூறியுள்ளான் :

وَٱفۡعَلُواْ ٱلۡخَيۡرَ لَعَلَّكُمۡ تُفۡلِحُونَ ۩ ٧٧

விளக்கம் : “*நீங்கள் நல்லதைச் செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றி பெறலாம்.*”
(அத்தியாயம் : அல்-ஹஜ் வசனம் : 77)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

مَنْ سَنَّ فِى الْإِسْلَامِ سُنَّةً حَسَنَةً فَلَهُ أَجْرُهَا

விளக்கம் : “யார் இஸ்லாத்தில் (அல் குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் முரண்படாத முறையில்) நற்கருமமொன்றை உருவாக்குவாரோ அவருக்கு அதை உருவாக்கியதற்கான நன்மையுண்டு.”
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

வினா 42 : إِذا سَأَلْتَ فَاسْئَلِ اللهَ وَإِذا اسْتَعَنْتَ فَاسْتَعِنْ بِاللهِ

“நீர் கேட்டால் அல்லாஹ்விடம் கேளும், மேலும் நீர் உதவி தேடினால் அல்லாஹ்வைக் கொண்டு உதவி தேடும்” என்ற அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் வார்த்தையில் நாடப்பட்டுள்ள கருத்து என்ன?

விடை : இதன் கருத்தாவது நிச்சயமாக கேட்கப்படக்கூடியவர்களில் மிகச் சிறந்தவனும், உதவி தேடப்படக்கூடியவர்களில் மிகச்சிறந்தவனும் அல்லாஹ்வாகும். மாறாக அல்லாஹ் அல்லாதவைகளிடம் கேட்கக் கூடாது என்றோ, அல்லாஹ் அல்லாதவைகளைக் கொண்டு உதவி தேடக்கூடாது என்றோ இந்த ஹதீஸ் ஒருபோதும் பொருள் தரமாட்டாது.

இதற்கு சான்றாக பின்வரும் ஹதீஸை குறிப்பிடலாம். நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

“நீர் மு:்மினைத் தவிர வேறு யாருடனும் தோழமை கொள்ள வேண்டாம் மேலும் உனது உணவைத் தக்வா உடையவரைத் தவிர வேறு யாரும் சாப்பிடவும் வேண்டாம்”

(அறிவித்தவர் : இப்னு ஹிப்பான்)

அதாவது தக்வா உடையவர்தான் உணவளிக்கப்படுவதற்கு மிகச் சிறந்தவர் மேலும் மு:்மின் தான் தோழமை கொள்ளப்படுவற்கு மிகவும் ஏற்றமானவர். மாறாக தக்வாதாரி அல்லாதவருக்கு உணவளிக்கக் கூடாது என்பதோ மு:்மின் அல்லாதவரைத் தோழமை கொள்ளக் கூடாது என்பதோ கருத்தல்ல.

முஸ்லிம்கள் காபிர்களுக்கு உணவளிக்கும் நற்பண்பைப் புகழ்ந்து அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :

وَيُطْعِمُونَ ٱلطَّعَامَ عَلَىٰ حُبِّهِۦ مِسْكِينًا وَيَتِيمًا وَأَسِيرًا ﴿٨﴾

விளக்கம் : “*அவர்கள் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைக்கும், அநாதைக்கும், கைதியிற்கும் உணவளித்து வருகின்றனர்.*”

இங்கு கைதி என்று குறிப்பிடப்பட்டது காபிரான கைதியாகும்.

அல்-ஹதீஸ்:

“நிச்சயமாக மூன்று நபர்கள் தாங்கள் செய்த நற்கருமங்களைப் பொருட்டாக வைத்து அல்லாஹ்விடம் உதவி கேட்ட போது அல்லாஹ் அவர்களின் கஷ்டங்களை நீக்கினான்.”

(அறிவித்தவர்கள் : இமாம் அல்-புஹாரி, இமாம் முஸ்லிம்.)

வினா 43 : ஆண்களும், பெண்களும் நபி முஹம்மத் ﷺ அவர்களின் புனித அடக்கஸ்தலத்தைத் தரிசிப்பதை இஸ்லாம் அனுமதித்துள்ளது என்பதற்கான ஆதாரம் என்ன?

விடை : முஜ்தஹித்களான இமாம்களின் ஏகோபித்த முடிவின் படி அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் புனித அடக்கஸ்தலத்தைத் தரிசிப்பது ஸுன்னஹ்வாகும். இந்த ஏகோபித்த முடிவை அல்-காழீ இயாழ் ؓ, அந்-நவவீ ؓ போன்ற இஸ்லாமியப் பேரறிஞர்கள் பதிவு செய்துள்ளனர்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَلَوْ أَنَّهُمْ إِذ ظَّلَمُوٓاْ أَنفُسَهُمْ جَآءُوكَ فَٱسْتَغْفَرُواْ ٱللَّهَ وَٱسْتَغْفَرَ لَهُمُ ٱلرَّسُولُ لَوَجَدُواْ ٱللَّهَ تَوَّابًا رَّحِيمًا ﴿٦٤﴾

விளக்கம் : "*நிச்சயமாக அவர்கள் தங்களுக்கே அநியாயம் இழைத்தவர்களாக உங்களிடம் வந்து அவர்கள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத்தேடி, அல்லாஹ்வின் தூதரும் அவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடினால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் மன்னிப்பையும், அருளையும் பெற்றுக்கொள்வார்கள்.*"
(அத்தியாயம் : அந்-நிஸாஉ வசனம் : 64)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

مَنْ زَارَ قَبْرِيْ وَجَبَتْ لَهُ شَفَاعَتِيْ

விளக்கம் : "யார் எனது கப்ரை தரிசிக்கிறாரோ

அவருக்கு எனது மன்றாட்டம் (ஷபா[F]அத்) உண்டு.''
அறிவித்தவர் : அத்-தாருகுத்னீ - இந்த ஹதீஸை ஹதீஸ் கலையில் ஹாபிழான இமாம் ஸுப்கீ அவர்கள் பலமானது எனக்கூறியுள்ளார்கள்.

لَا تُشَدُّ الرِّحَالُ إِلَّا إِلَى ثَلَاثَةِ مَسَاجِدَ

என்ற ஹதீஸின் விளக்கம் :
யாராவது ஒருவர் தொழுகைக்காக ஏதோ ஒரு பள்ளியிற்கு பிரயாணம் செல்ல நாட்டம் வைத்திருந்தால் அவர் இந்த மூன்று பள்ளிகளுக்கும் பிரயாணம் செய்து கொள்வார். ஏனெனில் இவைகளில் தான் தொழுகையின் நன்மைகள் பன்மடங்காக்கப்படும். இந்த விடயம் மார்க்கத்தில் கட்டாயமாக்கப்படாத ஸுன்னஹ் என்பதே தவிர வாஜிபான ஓர் கடமையல்ல. ஸுன்னஹ் என்பது அதை செய்வதின் மூலம் ஒரு மு.ஃ.மின் நன்மை பெறுவான். அதை விடுவதன் மூலம் தண்டிக்கப்படமாட்டான்.

இங்கு கூறப்பட்டுள்ள ஹதீஸ் தொழுகைக்காகப் பிரயாணம் செய்வதையே குறித்து வந்துள்ளது. அதில் நபி ﷺ அவர்களின் கப்ரைத் தரிசிக்கச் செல்வது கூடாது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

வினா 44 : ''அத்-தபர்ருக்'' இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதற்குரிய ஆதாரம் என்ன?
விடை : நபி ﷺ அவர்களைக் கொண்டும் மேலும் அவர்களின் நினைவுச் சின்னங்களைக் கொண்டும் பரக்கத் பெறுவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.

அல்-குர்ஆன் நபி யூஸுப் ﷵ அவர்கள் கூறியதாக அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான் :

ٱذۡهَبُواْ بِقَمِيصِي هَٰذَا فَأَلۡقُوهُ عَلَىٰ وَجۡهِ أَبِي يَأۡتِ بَصِيرٗا ﴿٩٣﴾

விளக்கம் : "*நீங்கள் என்னுடைய இந்த ஆடையைக் கொண்டு சென்று எனது தந்தையின் முகத்தில் போடுங்கள் அவர் பூரண பார்வையை பெற்றுவிடுவார்.*"
(அத்தியாயம் : யூஸுப் வசனம் : 93)

குறிப்பு : நபி யூஸுப் ﷵ தனது ஆடையை அவர்களது தந்தையாகிய நபி ய.்.கூப் ﷵ அவர்களுக்கு கொடுத்தனுப்பியது தன் தந்தை அதை தம் முகத்தில் வைத்து "தபர்ருக்" எனும் அருள் மூலம் பார்வையை அடைவதற்காகவே என்பதை மேற்குறித்த திருக்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது.

அல் ஹதீஸ் :
"அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள், மக்கள் தனது புனிதமிகு முடியை வைத்து பறகத் பெறுவதற்காக அதனை அவர்களுக்கிடையே பங்கிட்டுக் கொடுத்தார்கள்."
(அறிவித்தவர்கள் : இமாம் அல்-புஹாரீ, இமாம் முஸ்லிம்)

வினா 45 : மார்க்கத்தில் தடுக்கப்பட்ட சொற்கள், எழுத்துக்கள், பெயர்கள், குறியீடுகள் இல்லாமல் அல்-குர்ஆன் வசனங்களை அல்லது பெருமானார் ﷺ அவர்களால் கற்றுத்தரப்பட்ட துஆக்களை உள்ளடக்கிய "ஹிர்ஸ்" (الحرز) எனப்படும் தாயத்தை அணியலாம் என்பதற்கான ஆதாரம் என்ன?

விடை : அல்லாஹ் கூறியுள்ளான் :

وَنُنَزِّلُ مِنَ ٱلْقُرْءَانِ مَا هُوَ شِفَآءٌ وَرَحْمَةٌ لِّلْمُؤْمِنِينَ ﴿٨٢﴾

விளக்கம் : "*முஃமின்களுக்கு நிவாரணத்தையும் அருளையும் நாம் குர்ஆனில் இறக்கி வைத்துள்ளோம்.*"
(அத்தியாயம் : அல்-இஸ்ராஉ  வசனம் : 82)

அல் ஹதீஸ் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﵁ அவர்கள் கூறியுள்ளார்கள் :
"நாங்கள் எங்கள் சிறார்களுக்கு அல்-குர்ஆன் வசனங்களை கற்றுக் கொடுக்கக் கூடியவர்களாகவும் மேலும் அவர்களில் யாரெல்லாம் பருவம் அடைந்திருக்கவில்லையோ அவர்களுக்கு அவைகளை ஓர் தாளில் எழுதி அவர்களது கழுத்தில் தொங்க விடுபவர்களாகவும் இருந்தோம்."
(அறிவித்தவர் : இமாம் அத்-திர்மிதீ)

வினா 46 : ஜனாஸாக்களின் கடமைகளின் போது அல்லாஹ்வை திக்ர் செய்வதைப்பற்றி விபரிக்குக.

விடை : எவ்வித கருத்து முரண்பாடுகளுமின்றி ஜனாஸாக்களின் கடமைகளின் போது அல்லாஹ்வை திக்ர் செய்வது ஆகுமானதாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱذْكُرُواْ ٱللَّهَ ذِكْرًا كَثِيرًا ﴿٤١﴾

விளக்கம் : "*ஈமானுடையவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அதிகமதிகம் திக்ர் செய்யுங்கள்.*"
(அத்தியாயம் : அல்-அஹ்ஸாப் வசனம் : 41)

மேலும் அல்லாஹ் கூறியுள்ளான் :

ٱلَّذِينَ يَذْكُرُونَ ٱللَّهَ قِيَـٰمًا وَقُعُودًا وَعَلَىٰ جُنُوبِهِمْ ﴿١٩١﴾

விளக்கம் : "*அவர்கள் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் அல்லாஹ்வை நின்ற நிலையிலும், உட்கார்ந்த நிலையிலும், படுத்த நிலையிலும் திக்ர் செய்வார்கள்.*"
(அத்தியாயம் : ஆலு-இம்ரான் வசனம் : 191)

அல் ஹதீஸ் :

كَانَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَذْكُرُ اللهَ عَلى جَمِيْعِ أَحْوَالِهِ

விளக்கம் : "அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் தனது அனைத்து நிலைமைகளிலும் அல்லாஹ்வை திக்ர் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்."
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)

வினா 47 : 'த.ஃ.வீல்' (வலிந்துரை) செய்தல் பற்றி விபரிக்குக.

விடை : அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் ஆகிய இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களில் வந்துள்ள ஓர் வசனத்திற்கு அதன் நேரடித் தோற்றக்கருத்தை வழங்குவதால் ஏற்படும் விபரீதத்தைக் கருத்திற்கொண்டு அந்த நேரடிக் கருத்தை வழங்காது, மார்க்கத்திற்கும், மொழிக்கும் பொருந்தும் வகையில் வேறொரு கருத்தை அவ்வசனத்திற்கு வழங்குவதையே 'த.ஃ.வீல்' எனப்படும்.

படைப்புகளுக்கு முற்றிலும் மாற்றமானவனாகிய மற்றும் படைப்புகளிடம் காணப்படும் அனைத்துப் பண்புகளை விட்டும் பரிசுத்தமானவனாகிய

அல்லாஹ்வுக்கு படைப்புகளின் தன்மைகளான கை, முகம் போன்ற உறுப்புக்கள் உள்ளதாக அல்லது அவன் அவனது படைப்பான அர்ஷின் மீது அமர்ந்து கொண்டிருக்கிறான் என்பதாக அல்லது அவன் ஏதோ ஒரு திசையில் உள்ளான் என்பதாக அல்லது படைப்புகளிடம் காணப்படும் ஏதோ ஒரு பண்பு கொண்டவனாக உள்ளான் போன்ற இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளுக்கு முரண்படும் சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் வெளிப்படைக் கருத்துக்களைத் தரும் அல்-குர்ஆன் வசனங்களிலும் அது போன்ற ஹதீஸ்களிலும் த∴வீலை பயன்படுத்துவது ஆகுமானதாகும்.

அல்லாஹ் கூறியுள்ளான் :

وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُۥٓ إِلَّا ٱللَّهُ ۗ وَٱلرَّٰسِخُونَ فِى ٱلْعِلْمِ ﴿٧﴾

விளக்கம் : "*அதனுடைய த∴வீலை அல்லாஹ்வும், மார்க்க அறிவில் தேர்ச்சி பெற்றவர்களுமே தவிர வேறு எவரும் அறியமாட்டார்கள்.*"
(அத்தியாயம் : ஆலு-இம்ரான் வசனம் : 7)

அல் ஹதீஸ்:

اَللَّهُمَّ عَلِّمْهُ الْحِكْمَةَ وَتَأْوِيْلَ الْكِتَابِ

விளக்கம் : "யா அல்லாஹ் இவர்களுக்கு ஞானத்தையும், அல்-குர்ஆனுக்கு த∴வீல் செய்யும் அறிவையும் கொடுப்பாயாக" என அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களுக்கு பிரார்த்தித்தார்கள்.
(அறிவித்தவர்கள் : இமாம் புஹாரீ, இப்னு மாஜஹ், அல் ஹாபிழ் இப்னு ஜௌஸீ.)

இப்னு அப்பாஸ் ﷛ அவர்கள் கூறியுள்ளார்கள் :

أَنَا مِنَ الرَّاسِخِيْنَ فِى الْعِلْمِ

“நிச்சயமாக அந்த மார்க்க அறிவு கொடுக்கப்பட்டவர்களில் நானும் உள்ளேன்.”

வினா 48 : நிச்சயமாக ஒருவர் ஈமான் கொண்டிருப்பது அவரது நற்கருமங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனையாகும் என்பதற்குரிய ஆதாரம் என்ன?

விடை : அல்லாஹ் கூறியுள்ளான் :

وَمَن يَعْمَلْ مِنَ ٱلصَّٰلِحَٰتِ مِن ذَكَرٍ أَوْ أُنثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَأُو۟لَٰٓئِكَ يَدْخُلُونَ ٱلْجَنَّةَ وَلَا يُظْلَمُونَ نَقِيرًا ﴿١٢٤﴾

விளக்கம் : “***ஆண், பெண் எவராயிருந்தாலும் ஈமான் கொண்டவராக நற்கருமங்களைச் செய்தால் அவர்கள் சுவனத்தில் நுழைவார்கள், அற்ப அளவும் அநீதம் செய்யப்பட மாட்டர்கள்.***”
(அத்தியாயம் : அந்-நிஸாஉ வசனம் : 124)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

أَفْضَلُ الأَعْمَالِ إِيْمَانٌ بِاللهِ وَرَسُوْلِهِ

விளக்கம் : “அமல்களில் மிகச்சிறந்தது அல்லாஹ்வையும் அவனது தூதரையும் சரியான முறைப்படி ஈமான் கொள்வதாகும்.”
(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

வினா 49 :

كُلُّ شَىْءٍ هَالِكٌ إِلَّا وَجْهَهُۥ ﴿٨٨﴾

என்ற வசனத்தின் விளக்கம் யாது?

விடை : "*அல்லாஹ்வின் ஆட்சியைத்தவிர அனைத்துமே அழிந்து விடக்கூடியதே!*" அல்லது "*அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி மேற்கொள்ளப்பட்ட நற்கருமங்களைத் தவிர அனைத்துமே அழிந்து விடக்கூடியதே!*" என்பதாகும்.

இமாம் புஹாரி ﵁ அவர்கள் இவ்வசனத்திலுள்ள "இல்லா வஜ்ஹஹு" எனும் பதம் "அவனின் ஆட்சியைத்தவிர" எனும் கருத்தை தருகிறது எனக்கூறியுள்ளார்கள். மேலும் இமாம் ஸுப்யான் அஸ்-ஸௌரி ﵁ என்பவர் "இல்லா வஜ்ஹஹு" எனும் பதம் "அல்லாஹ்வுக்காக செய்யப்பட்ட நற்கருமங்களைத்தவிர" என்ற கருத்தை தருகிறது என கூறியுள்ளார்கள். இங்கு "வஜ்ஹு" எனும் சொல்லுக்கு "முகம்" எனும் உறுப்பை நாடி விளக்கம் கூறுவது குப்ராகும். அல்லாஹ் அதை விட்டும் தூய்மையானவன்.

வினா 50 :

ءَأَمِنتُم مَّن فِي ٱلسَّمَآءِ أَن يَخۡسِفَ بِكُمُ ٱلۡأَرۡضَ فَإِذَا هِيَ تَمُورُ ١٦

என்ற திருக்குர்ஆன் வசனத்தின் விளக்கம் யாது?

விடை : "*அல்லாஹ்வின் கட்டளையைக்கொண்டு, வானத்தில் உள்ள மலக்குகள், பூமியைப் பிளந்து உங்களை அதனுள்ளே விழுங்கச் செய்வார்கள் என்பதை நீங்கள் பயப்படவில்லையா?*" அல்-குர்ஆனின் விரிவுரையாளரான இமாம் அல்-பஹ்ர் அர்-ராஸீ ﵀ என்பவர் தனது விரிவுரையிலும், அபூ ஹையான் அல்-அன்தலூஸீ ﵀ என்பவர் தனது "அல்-பஹ்ருல் முஹீத்" என்ற கிரந்தத்திலும் இவ்வசனத்திலுள்ள "மன்பிஸ்ஸமா" (من فى السماء)

என்ற சொல்லின் கருத்து "வானத்திலுள்ள மலக்குகளையே குறிக்கிறது" மேலும் இது "அல்லாஹ் வானத்தில் குடியிருக்கிறான்" என்ற கருத்துடையதல்ல எனக் கூறியுள்ளார்.

வினா 51 :

وَٱلسَّمَآءَ بَنَيْنَـٰهَا بِأَيْيْدٍ وَإِنَّا لَمُوسِعُونَ ﴿٤٧﴾

என்ற திருக்குர்ஆன் வசனத்தின் விளக்கம் யாது ?

விடை : "***நம்முடைய வல்லமையைக் கொண்டே நாம் வானத்தை அமைத்தோம். மேலும் நிச்சயமாக அதை நாமே விசாலமாக்கினோம்.***"

இவ்வசனத்திலுள்ள "அய்தி[DH]ன்" (أيـــــــــد) எனும் சொல்லானது "வல்லமை" என்ற கருத்துடையது என இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் கூறியுள்ளார்கள். "அய்தி[DH]ன்" என்ற சொல்லின் ஒருமையானது "யதுன்" (يـــد) என்பதாகும். அரபு மொழியில் "யதுன்" என்ற சொல் பல கருத்துக்களைக் கொண்டது. அக்கருத்துக்களில் மனித உறுப்பான "கை" எனும் கருத்தும் உள்ளது. இத்திருவசனத்தில் இந்தக் கருத்தில் அச்சொல் பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில் அல்லாஹ் அதை விட்டும் தூய்மையானவன்.